

விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வளவனூர் பேரூராட்சி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். உடன் வளவனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், செயல் அலுவலர் அண்ணாதுரை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



விழுப்புரம், செப். 5 -

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் 08.09.2025 திங்கட்கிழமை மாலை 4.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம் .ஆர். கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

செப்டம்பர் 15ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக,

செப்டம்பர் 17ல் கரூரில்நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது சம்பந்தமாக,

வாக்குச்சாவடி முகவர் சரிபார்த்தல் (BLA2), (BLC), கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



இராமநாதபுரம், செப் 5 -

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் இன்று ( 05.09.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 3.30 மணி அளவில் பரமக்குடி, ஏ.பி.ஷா மகாலில் மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , வனத்துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர். எஸ்.இராஜகண்ணப்பன், மாவட்டக் கழக பொருளாளர் செ.முருகேசன் எம்.எல.ஏ, தலைமைக் கழகத்தால் நியமிக்கப் பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் (பரமக்குடி தொகுதி பார்வையாளர்), மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் (திருவாடனை தொகுதி பார்வையாளர்), புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன் (இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர்), விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் (முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர்) ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. செப்டம்பர் 11 தியாகி இம்மானுவேல்சேகரனார் நினைவேந்தல் முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்கள் வருகை. கழக ஆக்கப் பணிகள்,

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் மத்திய மாவட்டம்

# பொறியாளர் அணி பொறுப்புக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் இரா.இலட்சுமணன் அறிக்கை!



விழுப்புரம், செப். 5 -

விழுப்புரம் மத்திய மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் பொறியார் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் நடை பெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் இரா. இலட்சுமணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

விழுப்புரம் மத்திய மாவட்ட ஒன்றிய நகர பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் 06.09.2025 அன்று சனிக்கிழமை காலை 9 மணி அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது. இதில் மண்டல பொறுப்பாளர், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் சி.பிரதீப் நேர்காணலை நடத்தி வைக்கிறார்.

இந்நிகழ்வில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்.செல்வகுமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் குமரன், கிருஷ்ணமூர்த்தி, கோபிநாத், பிரசாத், வெங்கடேசன், திருமுருகன், ரீகன் ராஜ் ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைக்கிறார்கள்.

எனவே விழுப்புரம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தங்கள் பகுதியில் இருந்து ஒன்றிய நகர பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பதவிக்காக விண்ணப்பித்தவர்களை தவறாமல் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(குறிப்பாக டிப்ளமோ மற்றும் பொறியா ளர் சம்பந்தப்பட்ட படித்தவர்களாக இருக்க வேண்டும்.

இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்ட கழக செயலாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் தமது அறிக்கை வாயிலாக தெரிவித்துள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

**தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேருக்கு**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.5,00,000/– வழங்கினார்.**

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஜூலை மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 20 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1 | சு.சங்கீதா, க/பெ சுரேஷ், 44/127, பம்பிங் ஸ்டேஷன் சாலை, அண்ணா சாலை, சென்னை – 600 002. |
| 2 | சை.அப்துல் சமது, த/பெ சையத் இப்ராகிம், 60, தங்கமலைக் கரடு, கலிங்கியம், கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு – 638 453. |
| 3 | செ.லோகேஸ்வரி, க/பெ செந்தில்குமார், 9–13, மஸ்தி தெரு, பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004. |
| 4 | சா.வீரமணி, த/பெ சாராஜன், 6/94–பி, எஸ்.என்.பெருமாள் நகர், மணவிளை, சுசீந்திரம், கன்னியாகுமரி – 629 704. |
| 5 | து.குமரகுருபரன், த/பெ துரைபாண்டியன், 18–ஏ, வடக்கு மேட்டுத் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 625 005. |
| 6 | பா.ரா.தீபக், த/பெ ராமு, 226, 13–வது தெரு, சௌத்ரி நகர், வளசரவாக்கம், சென்னை – 600 087. |
| 7 | தி.அற்புதமணி, க/பெ திருமால், மரப்பேட்டை வீதி, உடுமலை சாலை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் – 642 001. |
| 8 | ரா.ராமசாமி, த/பெ ராமர், 161, அம்பேத்கர் நகர், பையர்நத்தம், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி – 636 905. |
| 9 | பி.ஹர்சன், த/பெ பிரேம்குமார், 21, கே.எஸ்.நகர், 19–வது தெரு, புழல் காவாங்கரை, சென்னை – 600 060. |
| 10 | மு.வெங்கடேசன், த/பெ முனுசாமி, 32, அக்கையா நாயுடு பிரதான சாலை, திருத்தணி, திருவள்ளூர் – 631 209. |
| 11 | சொ.சரண்யா, க/பெ சொரிமுத்து, 5/13, ஆசாரியார் தெரு, ஆலங்குளம், தென்காசி – 627 851. |
| 12 | க.கணபதி, த/பெ கண்மணி ராஜா, 6, பெருமாள் கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை – 600 081. |
| 13 | த.சம்பத், த/பெ தங்கவேல்பிள்ளை, 119/1, சன்னதித் தெரு, திருப்புலிவனம், உத்திரமேரூர், காஞ்சிபுரம் – 603 406. |
| 14 | ப.தாண்டமுத்து, த/பெ பழனிமுத்து, 1/42, மாரியம்மன் கோயில் தெரு, ஆசூர், குன்னம், பெரம்பலூர் – 621 708. |
| 15 | க.மகாதேவன், த/பெ கணேஷ், 5, சாஸ்திரி தெரு, கீழ் அயனம்பாக்கம், திருவேற்காடு, திருவள்ளூர் – 600 095. |
| 16 | தா.வரிசா இசாஜ், த/பெ தாஜூத்தீன், 101, அன்சாரி நகர், முதல் குறுக்குத் தெரு, மகபூப்பாளையம், மதுரை – 625 016. |
| 17 | க.கர்ணமுருகன், த/பெ கருப்பையா, 2/220–1, மேட்டுக்காரான், முத்துப்பேட்டை, காரான், இராமநாதபுரம் – 623 523. |
| 18 | ச.இந்துமதி, த/பெ சந்திரசேகரன், 79/3/6, அம்மன் நகர், சின்னியம்பாளையம், மொடக்குறிச்சி, ஈரோடு – 638 104. |
| 19 | சு.சேகர், த/பெ சுப்பையா, 3/282, கருப்பராயன் கோயில் வீதி, ஆத்துப்பாளையம், திருமுருகன்பூண்டி, திருப்பூர் – 641 652. |
| 20 | சு.ப.பரணிதரன், த/பெ பரமேஸ்வரன், 7–1/17, நாராயண நகர், முதல் தெரு, குமாரபாளையம், நாமக்கல் – 638 183. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 03.09.2025

கலைஞர் 100 1924 - 2023


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**அரங்கத்துறை**
**மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**
அ. து. ந. க. எண். அ3 / 1270 / 2025

**கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.**

மண்டலம்- 7, 8 மற்றும் 13ல் புதிய விளையாட்டுத் திடல் & புதிய உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி

பணியின் உத்தேச மதிப்பு **ரூ.97.84** இலட்சம் முதல் **ரூ.498.86** இலட்சம் வரை,
முன்வைப்பு தொகை: பணியின் மதிப்பில் **1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **18.09.2025** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **19.09.2025** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4886 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **கண்காணிப்பு பொறியாளர் (பூ (ம) வி)**





தமிழ்நாடு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில். தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகராட்சி 17, 18 வார்டுகள் சார்பாக நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் ஒற்றை பெற்றோர் உள்ள மாணவர்களுக்கு தமிழக அரசு வழங்கும் கல்வி உதவித்தொகை ரூபாய் 4000 பெறுவதர்காண விண்ணப்ப வடிவங்களை மாணவர்களுக்கு கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் உமா சங்கர் , நகர் மன்ற துணை தலைவர் சுனேதா செல்வகுமார் நகர் மன்ற உறுப்பினர்கள் வீருசிக்கம்மாள் சிவகுமார் சாதிக் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகராட்சி, மண்டலம் 3, வார்டு எண் 50ல் ராஜீவ்காந்தி நகரில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி ஆகியோர் சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் மின் இணைப்பு பெயர் மாற்றம் கோரிய 3 பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கினார்கள். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ஆணையாளர் லட்சுமணன், 3 வது மண்டல குழுத்தலைவர் கே.யூசுப்கான், மாமன்ற உறுப்பினர் அருணா விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.